## வவுனியா வடக்கு பிரதேச சபை

## வவுனியா மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 28 பெப்ரவரி 2020 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 22 ஜுன் 2020 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 22 ஜுலை 2020 ஆந் திகதியும் சபையின் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து வவுனியா வடக்கு பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் இணங்கி செயற்படல் வேண்டும் | வருடாந்த செயலாற்றல் அறிக்கையானது இனிவரும் காலங்களில் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படும் |

**(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | சபையினுடைய அனைத்து சொத்துக்களின் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | சொத்துக்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும் | பெறுமதி மதிப்பிடப்படாமையால் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. அடுத்த மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டு சீர்செய்யப்படும் |
| (ii) | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 214,170,673 பெறுமதியான நிலையான சொத்துக்களில் காணிகளின் பெறுமதி தனியே காட்டப்பட்டிருக்கவில்லை என்பதுடன் பெறுமானத்தேய்வு மேற்கொள்ளவேண்டிய சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்வு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை | சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்வு ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும். | பெறுமானத்தேய்வு ஏற்பாடுகள் அடுத்த மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டு சீர்செய்யப்படும் |
| (iii) | மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்பு வட்டி வருமானமாக ரூபா 3,319,406 பெறப்பட்டிருந்த போதிலும் ரூபா 4,104,875 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தமையினால் மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 785,469 ஆல் நிதிக்கூற்றுக்களில் கூட்டிக்காட்டப்பட்டிருந்தது. | உரிய காலப்பகுதிக்கான வைப்பு வட்டிகள் உரிய தொகையில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படல் வேண்டும் | அடுத்த மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் குறித்த வழு வெளிப்படுத்தப்பட்டு சீர்செய்யப்படும் |

**(இ) கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 111,229,898 பெறுமதியான நிலையான சொத்துக்களிற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 111,229,898 பெறுமதியான நிலையான சொத்துக்களுக்கான சான்றுகள் இனிவரும் காலங்களில் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படும். |

**1.4 இணக்கமின்மைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் 93 ஆம் பிரிவுகள் | சபையினால் கழிவு முகாமைத்துவ செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சட்ட ஏற்பாடுகளின் படி கழிவு முகாமைத்துவ செயற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் | பிரதேச எல்லைக்குள் வீடுகளில் கழிவுகளை அகற்றும் நடவடிக்கை இதுவரை காலமும் முன்னெடுக்கப்படுவதில்லை. வியாபார நிலையங்கள் மற்றும் பொது நிறுவனங்கள், வீதியோரங்கள் ஆகிய இடங்களில் முறையான கழிவகற்றல் முகாமைத்துவம் பின்பற்றப்படுகின்றது. |
| (ஆ) | 1952 இன் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகளின் நிறைவேற்றப்பட்ட இடைக்கால சட்ட ஏற்பாடுகளின் XI மற்றும் XII ஆம் பகுதிகள் | திண்ம கழிவு முகாமைத்துவம் தொடர்பில் வருடாந்தம் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட ஏற்பாடுகளின் படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தில் தனி நிதி ஒதுக்கத்தின் கீழ் கழிவு முகாமைத்துவம் மேற்கொள்ளப்படுகின்றது. அடுத்து வரும் வருடங்களுக்கான வருடாந்த செயற்திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| (இ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் | திண்ம கழிவு முகாமைத்துவம் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | அதிகாரச்சட்டத்தின் அறிவுறுத்தல்களுக் கமைய செயற்படல் வேண்டும் | கழிவு முகாமைத்துவம் தொடர்பில் தேசிய சுற்றாடல் அதிகார சபையுடன் இணைந்து செயற்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக ஒழுங்கு விதிகள் | | | |
| | (i) விதி இலக்கம் 32 | மீளாய்வாண்டிற்கான ஆதன வரி மதிப்பீடு தொடர்பான மதிப்பீட்டுப் பதிவேடு சபையினால் பேணப்பட்டிருக்கவில்லை | பிரதேச சபைகளின் ஒழுங்கு விதிகளுக்கமைய செயற்படல் வேண்டும் | இனிவரும் காலங்களில் ஆதனவரி அறவீடு தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மதிப்பீட்டுப்பதிவேடு பேணப்படும் |
| | (ii) விதி இலக்கம் 33 | சோலை வரி சம்பந்தமான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | பிரதேச சபைகளின் ஒழுங்கு விதிகளுக்கமைய செயற்படல் வேண்டும் | நில அளவை வரைபடம், உரிமையாளர் விபரங்கள் கிடைக்கப்பெற்றதும் ஆதனவரி தொடர்பான கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அறவீட்டிற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| | (iii) விதி இலக்கம் 59 | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 150(1) ஆம் பிரிவிற்கு அமைவாக வியாபார வரிகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகளின் ஒழுங்கு விதிகளுக்கமைய செயற்படல் வேண்டும் | தற்போது வியாபாரங்கள் தொடர்பான நிரல் தயாரிக்கப்பட்டு வியாபாரவரி அறவிடப்பட்டு வருகின்றன. |
| | (iv) விதி இலக்கம் 218 | காணிகள் கட்டடங்கள் யாவும் ஒவ்வோராண்டும் ஆகக் குறைந்தது ஒரு முறை தவிசாளரினால் சோதனை செய்விக்கப்பட்டிருக்கவில்லை | பிரதேச சபைகளின் ஒழுங்கு விதிகளுக்கமைய செயற்படல் வேண்டும் | சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள காணிகளுக்கான ஆவணங்கள் கிடைக்கப்பெற்றதும் எதிர்காலத்தில் வருடாந்த சோதனை நடவடிக்கைகள் இடம்பெறும் |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | | |
| | அத்தியாயம் xxiv இன் பிரிவு 4 | சபையின் 02 அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் ரூபா 94,384 தொகையினை கடந்த 06 வருடங்களுக்கு மேலாக அறவீடு செய்ய ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை | உரிய விதிகள் மற்றும் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக் கமைய செயற்படல் வேண்டும். | குறித்த நபர்களை தொடர்பு கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் | | | |
| | நிதி ஒழுங்குவிதி 891 | சபையினால் பிணைப் பண இடாப்பு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதி ஒழுங்குவிதிகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | குறித்த தகவல்களை பதிவேடாக பேண அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| (எ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | ஓவ்வொரு வருடத்திற்கு ஒரு முறை எரிபொருள் நுகர்வினை பரீட்சிக்க வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக் கமைய செயற்படல் வேண்டும். | வாகனங்களிற்கான எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது |
| (ஏ) | திறைசேரியின் 28 நொவெம்பர் 2002 ஆம் திகதிய சுற்றறிக்கை இல IAI/2002/02 | கணிணி மற்றும் அதன் உதிரிப்பாகங்கள் தொடர்பான பதிவேடு சபையினால் பேணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக் கமைய செயற்படல் வேண்டும். | கணினி மற்றும் அதன உதிரிப்பாகங்கள் தொடர்பான பதிவே பேணுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ஐ) | நிதி மற்றும் வெகுசன ஊடக சொத்து முகாமைத்துவ அமைச்சின் 2017 யூன் 28 ஆம் திகதிய 01/2017 சொத்து முகாமைத்துவச் சுற்றறிக்கை | நிலையான சொத்து தொடர்பான பதிவேடுகள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. என்பதுடன் சபையின் அனைத்து சொத்துக்களையும் ஆவணப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக் கமைய செயற்படல் வேண்டும். | நிலையான சொத்துப்பதிவேடு பேணுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,544,213 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,014,163 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | - | - | - | - | - | - | - | - |
| (ii) | வாடகைகள் | 4,843,860 | 7,573,871 | 6,394,566 | 1,179,305 | 5,083,000 | 8,193,747 | 5,428,264 | 2,765,483 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 401,000 | 300,591 | 300,591 | - | 940,000 | 793,166 | 793,166 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 12,620,500 | 17,694,149 | 12,236,880 | 5,457,269 | 9,237,000 | 11,709,798 | 5,902,629 | 5,807,169 |
| | **மொத்தம்** | 17,865,360 | 25,568,610 | 18,932,036 | 6,636,574 | 15,260,000 | 20,696,710 | 12,124,058 | 8,572,652 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரசிறை கடனாளிகளிடமிருந்து பெற வேண்டிய ரூபா 23,581,351 இனை 31 திசெம்பர் 2019 வரை அறவிட சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | சபையினால் உரிய காலத்தில் வருமானங்களை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் | மூலதன வேலைத்திட்டத்தின் மூலம் பெறவேண்டிய அரசிறைகள் தற்போது பெற்றுக்கொள்ளப்படுவதோடு ஏனைய அரசிறைகளை பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

### 2.2.3 வாடகைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையின் எல்லைக்குட்பட்ட கடைகளின் வாடகை நிலுவைகள் ரூபா 1,804,790 கடந்த 05 ஆண்டுகளாக சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை | நிலுவைகளை அறவிட சபையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் | நிலுவை வாடகை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபையின் எல்லைக்குட்பட்ட நில வாடகை நிலுவைகள் ரூபா 348,335 கடந்த 02 ஆண்டுகளாக சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை அறவிட சபையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் | நிலுவைகள் அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (இ) | சபையின் எல்லைக்குட்பட்ட வாகன வாடகை நிலுவைகள் ரூபா 272,120 பெறுமதியானது சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை | நிலுவைகளை அறவிட சபையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் | நிலுவைகள் அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

### 2.2.4 வியாபாரங்களின் உரிமைத்துவம் மீதான குத்தகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் எல்லைக்குட்பட்ட குத்தகை நிலுவைகள் ரூபா 12,583 கடந்த 02 ஆண்டுகளாக சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய காலத்தினுள் குத்தகை நிலுவைகளினை அறவிட சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் | சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் |

### 2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 39 வியாபார நிறுவனங்களுக்கு சபையினால் வியாபார அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் வியாபார அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் | பொது சுகாதார வைத்திய பரிசோதகரினால் சிபார்சு கிடைக்கப்பெற்ற பின் அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.6 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடை வாடகை நிலுவைகள் தொடர்பில் தண்டப்பணம் அறவிட ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தண்டப்பணம் அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் | இனிவரும் காலங்களில் தண்டப்பணம் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.7 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

#### (அ) நீதிமன்ற தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 12,956,781 நீதிமன்ற தண்டப்பணங்கள் பெறப்பட வேண்டியிருந்தது | உரிய காலத்தினுள் நீதிமன்ற தண்டப்பணங்கள் பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | நீதிமன்ற குற்றப்பணம், பெற்றுகொள்வதற்கான கோரிக்கை கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது |

#### (ஆ) முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 400,000 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | உரிய காலத்தினுள் சபையினால் முத்திரைக் கட்டணங்கள் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் | முத்திரை கட்டணங்கள் பெற்றுகொள்வதற்கான கோரிக்கை கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், 28 முக்கிய விடயங்கள் தொடர்பில் உப விதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2019 | பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம் முக்கிய விடயங்கள் தொடர்பில் உப விதிகள் | வட மாகாண சபையினால் வெளியிடப்பட்ட அனைத்து உப விதிகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. மீதமான துணை விதிகளினை |

| | | |
|---|---|---|
| திசெம்பர் 31 வரையிலும் 18 விடயங்கள் தொடர்பில் உப விதிகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | உருவாக்கப்படல் வேண்டும் | நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று சபையினால் தயாரிக்கப்படல் வேண்டும் | சபையினால் செயற்படுத்தப்பட்டிருக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பான செயல் நடவடிக்கைத்திட்டம் இனிவரும் காலங்களில் தயாரிக்கப்படும். |

**(இ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டினை அடைவதற்கு தவறியமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயற்பாடுகளின் செயலாற்றலுக்கு ரூபா 11,000,000 தொகையொன்று மதிப்பிடப்பட்டு ரூபா 1,879,154 செலவிடப்பட்டிந்தபோதிலும், எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் ரூபா 9,120,846 வெளியீட்டினை (Output) அடைந்து கொள்ள முடியாதிருந்தது | இனங்காணப்பட்ட செயற்பாடுகள் முழுமையாக நிறைவேற்றப்படல் வேண்டும் | பாதீட்டில் குறிப்பிடப்பட்ட உத்தேச வருமானங்கள் முழுமையாக கிடைக்கப் பெறாமையினால் தங்களால் இனங்காணப்பட்ட நடவடிக்கைகளை முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை. மேலும் நிதியீட்டமும் கிடைக்கப்பெறவில்லை. |

## (ஈ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

திண்மக் கழிவுகள் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | குப்பைகளை அகற்றுவதற்காக காணப்படுகின்ற இடங்களிற்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை | பொருத்தமான முறையில் திண்மக் கழிவு முகாமைத்துவம் தயாரிக்கப்பட்டு கழிவுகள் வெவ்வேறாக ஒழுங்குப்படுத்தி மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சிக்கு உட்படுத்தி சூழலுக்கு பாதிப்படையாதவாறு இயற்கை உரம் தயாரித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளபடல் வேண்டும். | காணிகளுக்கான அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு உரிய ஆவணங்கள் வழங்கப்பட்ட பின்னர் சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். |
| (ii) | நாள்தோறும் வீதிகள் தெருக்களில் குப்பைகளை சேகரிக்கும் நேரங்கள் நிச்சயிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் பொது மக்களுக்கு அது தொடர்பில் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை | | வீதிகளில் குப்பைகள் சேகரிக்கும் நேரம் தொடர்பில் இனிவரும் காலங்களில் மக்களுக்கு அறிவிக்கப்படும் |
| (iii) | சுகாதார தொழிலாளர்கள் வருடாந்த மருத்துவ பரிசோதனைக்கு உட்பட்டிருக்கவில்லை | | சுகாதார தொழிலாளர்களுக்கான வருடாந்த மருத்துவ பரிசோதனை இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படும். |
| (iv) | சபையினால் கழிவுகளை அகற்றுவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட சுகாதார முறைகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை | | கழிவுகளை அகற்றுவதற்குரிய ஏற்றுக்கொள்ளப்பட்ட சுகாதார முறைகள் பயன்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |
| (v) | சபையினால் குப்பைகள் கொட்டப்படும் இடங்களுக்கு வருகின்ற கால்நடைகளை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | குப்பை கொட்டப்படும் இடங்களுக்கு வருகின்ற கால்நடைகளை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். |
| (vi) | கழிவு முகாமைத்துவம் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | கழிவு முகாமைத்துவம் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள் இனிவரும் காலங்களில் வழங்கப்படும். |
| (vii) | சபையினால் சுற்றாடல் முகாமைத்துவத்தின் முக்கியத்துவம் குறித்து பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. | | சுற்றாடல் முகாமைத்துவத்தின் முக்கியத்துவம் குறித்து பாடசாலை மாணவர்கள் பொதுமக்களுக்கு இனிவரும் காலங்களில் அறிவுறுத்தல்கள் வழங்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (viii) | சபையின் குப்பைகளை பயன்படுத்தி சேதனப்பசளையினை உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | குப்பைகளை பயன்படுத்தி சேதனப்பசளை உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். |
| (ix) | திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்காக இடைக்கால சட்டமொன்று இயற்றப்பட்டிருக்கவில்லை. | | திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பில் சபையினால் துணைவிதிகள் உருவாக்கப்படாமையினால் இடைக்கால சட்டம் உருவாக்கப்படவில்லை. |
| (x) | கழிவு முகாமைத்துவ திட்டமொன்று காணப்படவில்லை. | | இனிவரும் காலங்களில் குறித்த திட்டமானது நடைமுறைப்படுத்தப்படும். |

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 23 ஆம் திகதிய க.செ.பொது/2018/61ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு சபையின் தயார்நிலைப்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு பொருத்தமான விடயங்களை ஆராய்ந்து எதிர்வரும் காலங்களில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையினால் பொருத்தமான ஒப்பந்தகாரரினை நியமிக்காததினால் நீதிமன்ற செலவாக ரூபா 961,133 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | பொருத்தமான ஒப்பந்தகாரரினை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | பொருத்தமான ஒப்பந்ததாரரை தெரிவு செய்வதற்கும் நீதிமன்ற செலவுகளை குறைத்துக் கொள்வதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் |
| (ஆ) | சபையின் வாகனங்களுக்கான மீளாய்வாண்டிற்கான வருமான வரி பத்திரம் பெற்றுக்கொள்ளும் போது 12 வாகனங்களுக்காக ரூபா 4,065 தண்டப்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தது. | உரிய காலத்தில் வாகன வரி அனுமதிப்பத்திரம் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் பொறுப்பான | இனிவரும் காலங்களில் தண்டப்பணம் செலுத்தாது உரிய காலத்தில் வரிப்பத்திரம் பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | | உத்தியோகத்தரிடமிருந்து தண்டப்பணங்கள் அறவிடப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் | |
| (இ) | சபையின் நிலையான வைப்புக்கள் தொடர்பாக 31 திசெம்பர் 2019 இல் முடிவுற்ற வருடத்திற்கான மீதிகளாக ரூபா 37,564,503 பெறுமதியான 10 வைப்புக்கள் உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது தொடர்ந்தும் சபையினால் வைப்புக்களாக பேணப்பட்டு வருகின்றது | நிலையான வைப்புக்களை குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் | 2004, 2005 ஆண்டுகளில் நோக்கம் குறிக்கப்படாமல் 06 நிலையான வைப்பாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மற்றைய 04 நிலையான வைப்புக்கள் குறித்த நோக்கம் நிறைவேற்றப்படாமையால் முடிவுறுத்தப்படவில்லை. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 திசம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் 09 ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை | உரிய காலத்தினுள் ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படல் வேண்டும் | வட மாகாண பிரதிப் பிரதம செயலாளர் நிர்வாகம் அவர்களிடம் கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) | சபையின் 02 அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் ரூபா 94,384 தொகையினை கடந்த 06 வருடங்களுக்கு மேலாக அறவீடு செய்ய ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய கால ஒழுங்கில் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | குறித்த நபர்களை தொடர்பு கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சோலை வரி சம்பந்தமான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சோலை வரி சம்பந்தமான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். | நில அளவை வரைபடம், உரிமையாளர் என்பன. விபரங்கள் கிடைக்கப்பெற்றதும் ஆதனவரி தொடர்பான கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அறவீட்டிற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | சபையினால் மீளாய்வாண்டிற்காக பாதீடப்பட்ட ரூபா 1,800,000 பெறுமதியான 18 ஒப்பந்த வேலைகள் மீளாய்வாண்டில் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த காலத்திற்குள் வேலையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | ஒப்பந்த வேலைகளில் கால தாமதங்கள் ஏற்படுவதனை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத்தவறியமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் EP HR 2742 இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் மற்றும் NP QR 6033 இலக்கமுடைய முச்சக்கரவண்டி 02 தொடக்கம் 10 வருடங்களுக்கு மேலாக பாவனைக்கு ஏற்ற வகையில் திருத்தி பாவனையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | சபைக்கு உரித்தான வாகனங்களை பாவனைக்கு ஏற்ற வகையில் திருத்துவதற்கு அல்லது அழிப்புச் செய்வதற்கான பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் | சபையின் EP HR 2742 இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் அழிப்பு செய்யவதற்கு பிரதம செயலாளர் அவர்களின் அனுமதிக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. NP QR 6033 இலக்கமுடைய முச்சக்கரவண்டி திருத்தம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

#### 3.5.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், சபைக்குரிய காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிராததுடன் காணி மற்றும் கட்டிடங்கள் பதிவேடும் சபையினால் முறையாக பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே காணி மற்றும் கட்டிடங்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டு சபைக்குச் சொந்தமான அவ்வாறான சொத்துக்கள் தொடர்பிலான உரிமையினை உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு உரித்தான காணிகளை சபையின் பெயருக்கு உரிமை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சபைக்குரிய காணி கட்டடங்கள் தொடர்பான வெளிப்படுத்தல்கள் மற்றும் அவை தொடர்பான பதிவேடுகள் பேணுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு காணி கட்டடங்களிற்கு இனிவரும் காலங்களில் உரிய முறையில் மெய்யாய்வு செய்யப்பட்டு உரிமை உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | சபைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டிருந்த 04 வாகனங்களினை சபைக்குரியதாக உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | சபையின் பெயருக்கு உரிமை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | குறித்த 04 வாகனங்களையும் சபைக்குரியதாக உரிமை மாற்றம் செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**3.5.3 விளைவற்ற/குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு வடக்கின் துரிதமீளெளிச்சித் திட்டத்தினால் 12 ஆகஸ்ட் 2011 இல் நிர்மானிக்கப்பட்டு கையளிக்கப்பட்ட ரூபா 26,137,591 பெறுமதியான பேருந்து நிலையத்தினை பாவனைக்கு உட்படுத்துவதற்கு சபையினால் நாளதுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிர்மானிக்கப்பட்ட பேருந்து நிலையத்தை குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | குறித்த பேருந்து நிலையமானது பொருத்தமற்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ளமையால் மக்கள் பாவனை குறைவாக உள்ளது. குறித்த பேருந்து நிலையம் தொடர்பாக இனிவரும் காலங்களில் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

**3.6 பெறுகை**

**3.6.1 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது ரூபா 2,588,460 தொகையான கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இனிவரும் காலங்களில் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு வருமான மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்காமலும் மதீப்பீட்டை சரியான முறையில் திட்டமிட்டு நிகழ்ச்சிப்படுத்தாமையுமே பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே ரூபா 100,409 தொடக்கம் ரூபா 5,781,190 வரையான வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | பாதீடானது வினைத்திறனான கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்படல் வேண்டும் | இனிவரும் காலங்களில் சரியான ஒப்பிடுகையின் மூலம் பாதீடு தயாரிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு செலவின மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்காமலும் மதீப்பீட்டை சரியான முறையில் திட்டமிட்டு நிகழ்ச்சிப்படுத்தாமையுமே பாதீட்டு செலவினத்திற்கும் உண்மை செலவினத்திற்கும் இடையே ரூபா 1,038 தொடக்கம் 5,029,511 வரையான வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | பாதீடானது வினைத்திறனான கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்படல் வேண்டும் | இனிவரும் காலங்களில் சரியான ஒப்பிடுகையின் மூலம் பாதீடு தயாரிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் நடவடிக்கைகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்காக உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டுள்ள போதும் மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகள் திருப்திகரமாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | உள்ளக கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் | உள்ளக கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட விடய உத்தியோகத்தர்களுக்கு முன்னளிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றது. |